**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.221/2016**

**DW : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுப்பையா | **Caste** | : |
| **Father's Name** | : மொட்டையக்கவுண்டர் | **Calling** | : ஆட்டோ பைனான்ஸ் |
| **Village** | : தென்னம்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 64/2026 |
| | | **Dated** | : 17.04.2026 |

**17.04.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>**

இவ்வழக்கின் எதிரி முத்துச்சாமி எனக்கு தெரியும். இவ்வழக்கின் புகார்தாரர் மணிசேகரன் தெரியும். இருவரும் உறவினர்கள். வழக்கு சம்பந்தமாக தெரியாது. ராபர்ட், முகமது யாசின், எதிரி ஆகிய மூவரும் எனது நிறுவனத்தில் மாதாந்திர சீட்டுத்தொகை செலுத்திவந்ததால் இவ்வழக்கு காசோலை எதிரி என்னிடம் பொறுப்பிற்காக கொடுத்திருந்தார் என்றால் இல்லை. அந்த பொறுப்பிற்காக கொடுத்த காசோலையை புகார்தாரர் மூலம் எதிரி மீது வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலையை எதிரி என்னிடம் தான் கொடுத்திருந்தார் என்றாலும் இவ்வழக்கிற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி முத்துச்சாமிக்கும் எனக்கும் வரவு செலவு இருந்ததா என்றால் இல்லை.

எதிரியின் மனைவி சுமார் 15 வருடம் முன்பாக எனக்கு அய்யலூரில் உள்ள எனது சொத்தை கிரையமாக பதிந்துகொடுத்தார். மேற்படி சொத்து சம்பந்தமாகவும் இவ்வழக்கு காசோலை சம்பந்தமாகவும் எதிரியின் மனைவி சுப்புலெட்சுமி இந்நீதிமன்றத்தில் தனிநபர் புகார் கொடுத்து நிலுமைவில் உள்ளது என்றால் சொத்து சம்பந்தமாக மட்டும் தான் வழக்கு தொடுத்தார். காசோலை சம்பந்தமாக இல்லை.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எதிரியின் மனைவியிடம் சரியான பிரதிபிரயோஜனம் பெற்றுதான் எனக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.17 08:27:20 +0530

Judicial Magistrate No.II
Dindigul.